**Event to be held on Friday February 22nd 2019 at SMCEPC, Thirupachur Village from 10.30 a.m. onwards.**

Central Palmgur and Palm Products Institute (CPPI) of the Khadi Village Industries Commission (KVIC) will hold a one - day orientation programme on preparation and sales of different village level products and will be conducted by officials of CPPPI-KVIC. A variety of courses and training programmes like tailoring and embroidery, basic and advanced beautician courses, screen and textile printing along with simple chemical making, baking, herbal products making, fruit and vegetable processing, will be illustrated with materials required, course contents, duration of course, and fees if any. Sale of products at exhibitions and *melas* through CPPI-KVIC's skill development training to prepare a host of products like hand- made paper, sanitary napkins, fashion jewellery, confectionery, home-made chocolates, palm leaf articles, photo-lamination, mushroom cultivation, polymer and rubber stamp making will be elaborated with power point presentations. Also the CPPPI and its role in the development of villages and the different training and exhibition programmes available for villagers will be elaborated.

**திருப்பாச்சூர் கிராமம் ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி விரிவாக்கத் திட்ட மையத்தில் பிப்ரவரி 22 2019 வெள்ளிக்கிழமை காலை 10:30 மணி தொடங்கி நடைபெற உள்ள ஒரு நாள் புத்தொளிப் பயிற்சி**

காதி கிராமியத் தொழிற்சாலை ஆணையத்தின் மத்திய பனைவெல்லம் மற்றும் பனைப்பொருட்கள் நிறுவனம் கிராம அளவிலான பல்வேறு உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதையும் விற்பனை செய்வதையும் குறித்து ஒரு நாள் புத்தொளிப் பயிற்சியினை நடத்த உள்ளது.

அந்நிறுவனத்தின் அலுவலர்களின் வழிகாட்டுதலின் கீழ் இப்பயிற்சி நடைபெறும். தையல் கலை, எம்பிராய்டரி, அடிப்படை மற்றும் உயர்நிலை அழகுக்கலைப் பயிற்சி, அலங்கார நகைகள் தயாரித்தல், திரை மற்றும் துணியில் அச்சிடுதல், வீட்டிலேயே சாக்லெட் தயாரித்தல், அடுமனைப் பண்டங்கள் செய்தல் (baking), இனிப்புப் பண்டங்கள் செய்தல் (confectionery), மூலிகைப் பொருட்கள் தயாரித்தல், பழம் காய்கறிகளைப் பதப்படுத்துதல், எளிய வேதிப்பொருட்கள் (துப்புரவு) தயாரித்தல், சானிடரி நாப்கின் தயாரித்தல், கையால் தாள் தயாரித்தல், பனையோலைப் பொருட்கள், புகைப்பட லாமினேஷன் செய்தல், காளான் சாகுபடி, பாலிமர் மற்றும் ரப்பர் ஸ்டாம்ப் செய்தல் போன்றவை குறித்துச் செய்முறை பயிற்சி அளிக்கப்படும். அந்நிறுவனம் வழங்கக்கூடிய பல்வேறு பயிற்சிகள், கண்காட்சிகள் குறித்தும் விரிவாக எடுத்துக்கூறப்படும்.

பயிற்சியின் உள்ளடக்கமும், கால அளவும் அத்துடன் கட்டணம் ஏதேனும் இருப்பின் அது பற்றிய விவரங்களும் தெரிவிக்கப்படும். அப்படி தயாரிக்கப்பட்ட பொருட்களைக் கண்காட்சிகளிலும் மேளாக்களிலும் நிறுவனத்தின் மூலமாகவே விற்பனை செய்யலாம். பயிற்சி முடிந்தபின் அரசே சான்றிதழ் வழங்கும். வங்கியின் மூலம் கடன் உதவியும் கிடைக்கும். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களை இதன்மூலம் மேற்கொள்ளலாம்.

நிகழ்ச்சி: கிராம அளவிலான பல்வேறு உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பும் விற்பனையும் - ஒரு நாள் புத்தொளிப் பயிற்சி

ஒருங்கிணைப்பாளர்: மத்திய பனை வெல்லம் மற்றும் பனைப்பொருட்கள் நிறுவனம், காதி கிராமியத் தொழிற்சாலை ஆணையம்

நிகழிடம்: கிராமம் ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி விரிவாக்கத் திட்ட மையம், திருப்பாச்சூர் கிராமம்

நாள், நேரம்: பிப்ரவரி 22ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10:30 மணி